# பெப்ரவரி - 19 - பொதுக்கால 7 ம் வார ஞாயிறு

**“ உங்கள் பகைவரிடமும் அன்பு கூருங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காக இறைவனிடம் வேண்டுங்கள்.” (மத் 5: 44)**

----------------------------------------------------------------

## முதல் வாசகம்: லேவியர்19:1 – 2, 17 – 18

ஆண்டவர் மோயீசனை நோக்கி: இஸ்ராயேல் மக்கள் எல்லாச் சபையாருக்கும் நீ சொல்ல வேண்டியதாவது: நாம் உங்கள் கடவுளாகிய ஆண்டவர். நாம் பரிசுத்தராய் இருப்பதால் நீங்களும் பரிசுத்தராய் இருங்கள். உன் சகோதரனை உன் இதயத்தில் பகைக்காதே. ஆனால், அவனுடைய பாவத்திற்கு நீ உடந்தை யாகாதபடிக்கு வெளிப்படையாய் அவனுக்கு அறிவுரை சொல். பழிக்குப் பழி வாங்கத் தேடாதே. உன் மக்கள் உனக்கு அநீதி செய்தாலும், மனத்தில் பொறாமை கொள்ளாதே. உனக்கு அன்பு செய்வது போல் உன் அயலானுக்கும் அன்பு செய். நாம் ஆண்டவர்.

**பதில்பாடல்:** ஆண்டவர் இரக்கமும் அருளும் உடையவர்

## இரண்டாம் வாசகம்: 1 கொரிந்தியர் 3:16 - 23

சகோதர சகோதரிகளே! நீங்கள் கடவுளின் ஆலயம் என்பதும், கடவுளின் ஆவி உங்களுள் குடிகொண்டிருக்கிறார் என்பதும் உங்களுக்குத் தெரியாதா?கடவுளின் ஆலயத்தை எவனாவது அழித்தால், அவனைக் கடவுள் அழித்து விடுவார். ஏனெனில், கடவுளின் ஆலயம் பரிசுத்தமானது. நீங்களே அவ்வாலயம்.யாரும் ஏமாந்து போகக் கூடாது. உங்களுள் எவனாவது இவ்வுலகப் போக்கின்படி தன்னை ஞானி எனக் கருதினால், ஞானியாகும்படி மடையனாகட்டும்.ஏனெனில், இவ்வுலகத்தின் ஞானம் கடவுள் முன் மடமை தானே. “ஞானிகளை அவர்களுடைய சூழ்ச்சியிலேயே சிக்க வைக்கிறார்“ என்றும், “ஞானிகளின் எண்ணங்களை அறிவார், அவை வீண் என அவருக்குத் தெரியும் என்றும் எழுதியுள்ளதன்றோ? ஆகையால் வெறும் மனிதர்களைப் பற்றி யாரும் பெருமை பாராட்டலாகாது.சின்னப்பனோ, அப்பொல்லோவோ, கெபாவோ, உலகமோ,வாழ்வோ, சாவோ, நிகழ்காலமோ எதிர்காலமோ எல்லாம் உங்களுக்கு உரியவையே. நீங்களோ கிறிஸ்துவுக்கு உரியவர்கள் கிறிஸ்து கடவுளுக்கு உரியவர்.

## நற்செய்தி: மத்தேயு 5 : 38 – 48

அக்காலத்தில் இயேசு திரளான கூட்டத்தைக் கண்டு, மலைமீது ஏறித் திருவாய் மலர்ந்து போதிக்கலானார்: ”கண்ணுக்குக் கண், பல்லுக்குப் பல்“ என்று சொல்லியுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகிறேன்: தீயோனை எதிர்க்க வேண்டாம். ஆனால் யாராவது உன் வலக்கன்னத்தில் அறைந்தால், அவனுக்கு மறுகன்னத்தையும் காட்டு. யாராவது வழக்காடி, உன் உள்ளாடையை எடுத்துக்கொள்ள விரும்பினால், அவனுக்கு உன் மேலாடையையும் கொடுத்துவிடு. யாராவது உன்னை ஒரு கல் தொலைவு வரக் கட்டாயப்படுத்தினால், இரு கல் தொலைவு அவனோடு செல். கேட்கிறவனுக்குக் கொடு உன்னிடம் கடன் வாங்க விரும்புகிறவனுக்கு முகம் கோணாதே. அயலானுக்கு அன்பு பகைவனுக்கு வெறுப்பு“ என்று சொல்லி யுள்ளதைக் கேட்டிருக்கிறீர்கள். நானோ உங்களுக்குச் சொல்லுகின்றேன் உங்கள் பகைவர்களுக்கு அன்பு செய்யுங்கள் உங்களைத் துன்புறுத்துவோருக்காகச் செபியுங்கள். அப்பொழுது வானகத்திலுள்ள உங்கள் தந்தையின் மக்களாயிருப்பீர்கள். அவர் நல்லோர் மேலும் தீயோர் மேலும் தம் கதிரோனை உதிக்கச் செய்கிறார். நீதியுள்ளோர் மேலும் நீதியற்றோர் மேலும் மழை பொழியச் செய்கிறார். உங்களுக்கு அன்பு செய்பவர்களுக்கே நீங்கள் அன்பு செய்தால், உங்களுக்கு என்ன கைம்மாறு கிடைக்கும்? ஆயக்காரரும் இவ்வாறே செய்வதில்லையா? உங்கள் சகோதரருக்கு மட்டும் வணக்கம் செய்வீர்களாகில், நீங்கள் என்ன பெரிய காரியம் செய்கிறீர்கள்? புறவினத்தாரும் இவ்வாறே செய்வதில்லையா? ஆதலால், உங்கள் வானகத்தந்தை நிறைவு உள்ளவராய் இருப்பதுபோல, நீங்களும் நிறைவுள்ளவர்களாய் இருங்கள்.

**தியானம்:** இன்றைய வாசகங்களின் படி வாழ்வது என்பது மிக இலகுவான காரியமல்ல. வாசிக்க இலகுவாக இருக்கலாம், ஆனால் அதன்படி வாழ்வது அவ்வளவு சுலபம் அல்ல. கிறிஸ்த்தவ வாழ்வு என்பது பசுமையான வயல்வெளி அல்ல, மாறாக அது கரடு முரடானது. அண்மையில் கூட ஒரு 22 வயதுள்ள இளைஞனுக்கு அமரிக்க நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. ஏன் தெரியுமா? சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கறுப்பின தேவாலயத்திற்கு சென்று அமர்ந்து 10 நிமிடங்கள் மறையுரையை கேட்டுவிட்டு, அங்கிருந்த்வர்களை துப்பாக்கியினால் சுட்டான். அதில் பலர் உயிர் இழந்தும் காயப்பட்டும் இருந்தார்கள். இனவெறிதான் இதற்கு காரணம். இவ்வாறான நிலையில் அவ் இளைஞனை எம்மால் மன்னிக்க முடியுமா? புனிதர் நிலைக்கு உயர்த்தப்பட்ட பாப்பரசர் 2ம் அருளப்பரும், அன்னை தெரேசாவும் இதனை தமது வாழ்வில் செய்தார்கள். தன்னை சுட்டவனை சிறையில் சந்தித்து மன்னிப்பு கொடுத்தார் பாப்பரசர். அன்னை தெரேசா ஏழைகளுக்காக ஒரு பணக்காரரிடம் கை ஏந்தியபோது, அவர் அவரது வலக்கையில் துப்பினார். உடனே அன்னை தனது இடக்கைய நீட்டி ‘நீங்கள் எனக்கு தரவேண்டியதை தந்து விட்டீர்கள், இனி ஏழைகளுக்கு தாருங்கள் என்று சொல்லி அந்த பணக்காரர் மனமாற்றம் அடைய காரணமானார். இவ்வாறான மனிதர்களும் வாழத்தான் செய்கிறார்கள். எனவே நாமும் நற்செய்தியில் கூறப்பட்டதுபோல் வாழ முயற்சி எடுப்போம். அன்பு, தாழ்ச்சி, மன்னிப்பு போன்றவற்றை எம் வாழ்வில் கடைப்பிடிப்போம்.